மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொல்லியபடி ரூ. 15 பெறுவது குறைவு என்று கருதுவார்களானால், உள்ள படியே எவ்வளவு ஆகிறதென்று கருதுகிறார்களோ அதை வாங்க வழியிருக்கிறது. எவ்வளவு மருந்துக்குச் செலவழிக்கிறார்களோ, அதற்கான ரசீதுகளைக் கொடுத்தால் அவற்றிற்குரிய தொகையை அரசு தரும். இரண்டு முறைகளில் ஏதாவது ஒன்றை அவர்கள் கடைபிடிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 99. டாக்டர் அ. ஸ்ரீதரன்—மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

99—

தேயிலைத் தோட்டங்களுக்கு அளிக்கப்படும் தண்ணீருக்கு வரி

* 1376 டாக்டர் அ. ஸ்ரீதரன் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வால்பாறையிலுள்ள தேயிலைத் தோட்டங்களுக்கு அளிக்கப்படும் தண்ணீருக்கு ( ) வரி வசூல் செய்ய அரசிடம் கொள்கைக்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மூலம் கிடைக்கும் உத்தேச வருமானம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வால்பாறையிலுள்ள தேயிலைத் தோட்டங்களுக்கு தெளிப்பான் முறையில் பாசனம் செய்வதற்கான நடைமுறை நடந்து கொண்டிருக்கிறது. (மணி அடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (ஆ) 1400-ம் பசலியில் விதிக்கப்பட்ட தண்ணீர்த் தீர்வை மூலம் மட்டும் அரசுக்குக் கிடைக்கக்கூடிய வருமானம் ரூ. 19,131.

1991 செப்டம்பர் 28]

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் தேயிலைத் தோட்ட நிறுவனங்கள் நமது அரசுக்குச் சொந்தமான தண்ணீரை 'ஸ்பிரிங்கிள் வாட்டர்' முறை மூலமாகத் தங்கள் தேயிலைத் தோட்டங்களுக்குப் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் பயன்படுத்தும் அந்தத் தண்ணீருக்கு அவர்கள் செலுத்தும் கட்டணம் மிகவும் குறைவாக இருப்பதாக கட்சி சார்பற்ற அனைத்துத் தொழிலாளர்களும், தொழிற் சங்கங்களும் கூறுகிறார்கள். ஆகவே அரசு இதில் சிறப்பு கவனம் செலுத்தி, ஆய்வு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தெளிப்பான்கள் மூலமாக தண்ணீர் கொடுக்கிறபோது ஏக்கருக்கு 15 ரூபாய் வீதம் வசூல் செய்யப்படுகிறது. தெரியாமல் தண்ணீர் எடுத்தால் அதற்கு அபராதத் தொகையாக மிகவும் அதிகமாக 250 சத விகிதம் வசூல் செய்யப்படுகிறது. இப்படி யாராவது தனியார் துறையிலே தவறு செய்தால், அது அரசுக்குத் தெரிந்தால், அதிக பட்சமாக 250 சதவிகிதம் தண்ணீர் தீர்வை இன்றைக்கு வசூலிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் அரசுக்கு வரும் போது அரசு ஆராயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குச் செலுத்தப்பட வேண்டிய இந்தத் தண்ணீர் தீர்வை சரியாகச் செலுத்தப்படுகிறதா என்பதைக் கவனிப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், சட்டமன்ற உறுப்பினரும் அவ்வப்போது அந்த இடத்தில் ஆய்வு செய்வதற்கு வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9.40

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர்த் தீர்வை, நில் வரி இவைகளையெல்லாம் முறையாக அங்கே இருக்கிற அரசு அதிகாரிகள் கவனித்துக் கொண்டு வருகிறார்கள். அங்கே ஏதாவது தவறு நடந்தால், சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுக்கு இருக்கிற உரிமைப்படி அங்கேயிருக்கிற அதிகாரிகளிடம் தெரிவிக்கலாம். அதிகாரிகள் சரியாக நடக்காவிட்டாலும் அரசிடம் தெரிவிக்கலாம். தவறு நடக்காமல் இருப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் முன் வந்து உதவி செய்வதை இந்த அரசு ஏற்றுக் கொள்ளும்.